செ.வெ.எண்:11 நாள்:07.02.2017

# அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் குழந்தை திருமணம் தொடர்பான விழிப்புணர்வு அடங்கிய வாகனத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப., அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார்.

அரியலூர் மாவட்டம், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் **குழந்தை திருமணம் தொடர்பான விழிப்புணர்வு அடங்கிய வாகனத்தினை** மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ,ப.,** அவர்கள் இன்று (07.02.2017) கொடியசைத்து துவக்கி வைத்தார்.

**இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததவாது :-**

அரியலூர் மாவட்டம் சமூக நலம் மற்றும் சத்துணவுத்துறை மற்றும் Unicef நிறுவனத்துடன் இணைந்து குழந்தை திருணம் நடைபெறுவதை தடுப்பது தொடர்பான விளம்பர ஊர்தி மூலம் விழிப்புணர்வு நிகழ்ச்சி திருமானூர், செந்துறை மற்றும் ஆண்டிமடம் ஆகிய வட்டங்களில் உள்ள அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் பேருந்துநிலையம் / பொது இடங்களில் நடைபெறவுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் **திரு.எ.சரவணவேல்ராஜ், இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட சமூக நல அலுவலர் திருமதி.பூங்குழலி, திட்ட அலுவலர் திருமதி.வேலம்மாள் மற்றும் கலைக்குழுவினர் கலந்துகொண்டனர்.

செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.